**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 218/2025**

| | | | |
|---|---|---|---|
| Additional witness as LW 10 | | Examined as : PW 3 | |
| Name | : அகோரமூர்த்தி | Defence | : |
| Father Name | : சுப்ரமணியன் | Court | : |
| Village | : | Taluk | : |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர், பெரம்பூர் காவல் நிலையம் | Religion | : |
| Age | : 56/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 19.06.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் தலைமை காவலர் பன்னீர்செல்வம் மற்றும் உதவி ஆய்வாளர் கண்ணன் ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.04.2024 ஆம் தேதி பெரம்பூர் காவல் நிலைய தலைமை காவலர் பன்னீர்செல்வம் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்ற அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ரோஹத் த/பெ. ராமமூர்த்தி என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்று காவல் நிலைய மனு எண். 281/2024 என பதிவு செய்து விசாரணைக்கு பின்னர் அந்த புகார்

வாக்குமூலத்தின் அடிப்படையில் பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண். 142/2024, இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவுசெய்தார். அந்த **புகார் வாக்குமூலம் அசாஆ2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை உதவி ஆய்வாளர் கண்ணன் அவர்கள் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன் ராஜ் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரிகள் குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரிகளை தேடியபோது கடந்த 02.05.2024 13.00 மணிக்கு நல்லாடை பேருந்து நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்த 2 வது எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். 1, 3, 4வது எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறையில் முன்பிணை பெற்றிருந்ததால் அவரை கைது செய்ய இயலவில்லை.

4. இவ்வழக்கில் காயம் பட்ட அசா1, அசா2ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கலைச்செல்வி அவர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலத்தினையும், காயச்சான்றிதழ்களை பெற்றார். அந்த **காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடுகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து கடந்த 31.10.2025, இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால்

சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல் சம்பவ சாட்சிகளை விசாரிக்காமல் எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**